# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,259 — 1922 ம் ௵ வைகாசி௴ 26 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1892 ம் ஆண்டின் சிறுபட்டணங்களின் சௌக்கிய ஆதாரத்தைப்பற்றிய சட்டம்.

இரத்தினபுரி டிஸ்திறிக்கின் சௌக்கிய ஆதாரசங்கத்தால் 1892 ம் ஆண்டின் 18 ம் இலக்கச்சட்டத்தின் 32 (2) ம் பிரிவின்படி செய்யப்பட்டு அதிகாரமந்திரச்சபையோடு கூடிய தேசாதிபதியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் உப பிரமாணங்கள் சகலரு மறிந்துகொள்ளும்பொருட்டு இத்தால் பிரசித்தமாக்கப்படுகின்றன.

உத்தமனுரது கட்டளைப்படி,

பி. ஹோர்ஸ்பரோ,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

கலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1922 ம் ௵ மேய்௴ 19 ந் தேதி.

மேற்சுட்டிய உப பிரமாணங்களாவன.

ஆள்வரி.

1. 18 ம் வயதுக்கும் 55 ம் வயதுக்கும் உள்ளான குடியாயிருக்கும் ஆண்பிள்ளைகள் ஒவ்வொருவரும் வருடத்துக்கு ஒருவிசை தொடர்ச்சியாய் ஆறுநாள் பட்டணத்திலுள்ள பெருவழிகளில் அல்லது அவைகளைச் சரிக்கட்டும் அல்லது திருத்தும் வேலைகளில் அல்லது அவ்வேலைகளுக்கு வேண்டிய உபகரணங்களைச் சேர்க்கும் வேலையில் உட்படவேண்டியவர்களாவர்.

2. கீழ் குறிக்கப்பட்ட ஆட்கள் மேல்சொல்லப்பட்ட விதியின்படி செய்யவேண்டிய கடமையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

(a) 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கச் சட்டத்தின் 50 ம் பிரிவின்படியும் 1910 ம் ஆண்டின் 8 ம் இலக்கச் சட்டத்தின் 26 (5) ம் பிரிவின்படியும் வேலைசெய்யவேண்டிய கடமையிலிருந்து நீங்கப்பட்டவர்கள்.

(b) சங்கத்தாரின் கருத்துப்படிக்குச் சரீர நோய் அல்லது மாருட்டக்குணத்தாற் பீடிக்கப்பட்டோ அல்லது வேறு காரியத்தினுலோ வேலைசெய்யக்கூடாதவர்கள்.

3. வேலைசெய்ய உடன்பாடுடையர் வேலைசெய்வதற்கு பதிலாக வருடம் ஒன்றுக்கு ரூபா இரண்டு மார்ச்சுமாதம் 31 ந் திகதிக்குமுன் கொடுத்து வேலைசெய்யாது விலகிக்கொள்ளல் நீதியாயிருக்கும்.

4. கட்டளைகொடுக்கப்பட்டதின்பின் எவராயினும் வேலைசெய்யத் தவறினுல் அல்லது வேலைக்கு பதிலாக மாற்று பணம் கொடுக்கத் தவறினுல் அவர் 12 நாளிற்கு வேலைசெய்ய அல்லது இரண்டு பங்கு மாற்று பணம் (ரூபாய் 4)

மேமாசம் 31 ந் திகதிக்குமுன் கொடுக்கப் பாத்திரராவார். அப்படிச் செய்யாதுவிடுகிறவர்கள் அக்கிராசனர் 33 ம் பிரிவின்படி தமக்குள்ள தத்துவத்தைக்கொண்டு நடத்தும் அதிகாரத்துக்கு ஆளாவார்.

5. சபையால் நியமிக்கப்பட்ட கலெக்டர் கலெக்டர்மாரால் வரிப்பணம் சேர்க்கப்படும் (கலெக்டர் = வரிப்பணம் சேர்க்கும் உத்தியோகத்தர்).

6. வேலைசெய்தல் அல்லது வரிப்பணப் பணம் கொடுத்தலைப்பற்றிய விளம்பரங்கள் எல்லாம் எழுத்து மூலமாய் அல்லது பறைஅடித்துப் பிரசித்தஞ்செய்யப்படும்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலகச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மண்டாவலவில் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுககும் பாடசாலைகள்கட்டுகிற என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 17,856. குறிச்சி—மண்டாவல.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அனுபோககவத்த .. | 52 தென்னைகளும் ஒரு கிடுகுவீடும் உள்ளது | ஆர். பீ. ஆர். சயவாதினு .. | 2 0 8·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஸ்ரீ சூலைமாசம் 6 ந் தேதியிலன்று 12 மணிககு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுகாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1922 ம் ஸ்ரீ மேமீ 20 ந் உ.

ஜே. ஜி. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 8,090, அநுராதபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருநதால், அவர்கள் 1922 ம் ஸ்ரீ (மே) வைகாசிமீ 26 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம் 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் எச். சி. ரொல்லர் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டேனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவ்வகைளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

எச். சி. ரொல்லர்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை யறிந்துகொள்க.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமத்திய மாகாணம் கலகம்பலாத்த கலகம்கோறளே வடக்கு பகலகலகம்துலான பகலஅமனக்கற்றுவக் கிராமத்திலிருக்கு மித்துடனணைக்கப்படும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்கப்படும் காணித்துண்டுகள் :—

இலங்கை அளவைப் பிரதமபடம் 818.

| காணித் துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெல்கற்றுவ .. .. | 5 | 3 | 10 | 12 | அமுனேவெலவெதிபிம .. | 0 | 1 | 22 |
| 3 | அக்கறவெலேவெதிபிம .. | 0 | 0 | 8 | 13 | லோனுகாயேன .. .. | 26 | 1 | 9 |
| 4 | ஷை .. .. | 0 | 0 | 10 | 14 | காற்பாதை .. .. | 0 | 0 | 4 |
| 5 | ஷை .. .. | 0 | 0 | 16 | 15 | லோனுகாயேன (குளக்கட்டுச்சேமிப்பு) | 0 | 3 | 10 |
| 6 | ஷை .. .. | 0 | 0 | 15 | 32 | பகல அமனக்கற்றுவவெவ (குளமும் கட்டும்) .. .. | 60 | 2 | 10 |
| 7 | ஷை .. .. | 0 | 0 | 15 | 33 | மயிலகாயேன .. .. | 12 | 1 | 11 |
| 8 | ஷை .. .. | 0 | 0 | 17 | | | | | |
| 9 | ஷை .. .. | 0 | 0 | 6 | | | | | |
| 11 | மகாஎல .. .. | 1 | 2 | 0 | | | 108 | 1 | 3 |

எல்லைகளாவன: வடக்கு-பிற்றஎல (மாதிகாதிகமக் கிராம வெல்லை) மாதிகாதிகமக் கிராம வெல்லை மகாஎல (கொனுபெத்தவெவக் கிராம வெல்லை) மாவத்தவெவக் கிராம வெல்லை; கிழக்கு-பிற்றஎல, (வலகம்பகுவக் கிராம வெல்லை) வலகம்பகுவக் கிராம வெல்லை; தெற்கு-இகலஅமனக்கற்றுவக் கிராம வெல்லை, சிவலகமக் கிராம வெல்லை; மேற்கு-மாதிகாதிகமக் கிராம வெல்லை.

கவனிப்பு.—மேற்குறித்த எல்லைகளுக் குட்பட்டனவாகிய கீழ்க்குறிக்குங் காணித்துண்டுக ளிவ்வறிவித்தலினின்றும் விலக்கப்பட்டிருக்கின்றன வென்பதையு மவைகளின் விசாலத்தொகையாகும் 23 ஏக்கர் 2 றூட் 14 பேர்ச்சும் மேற்சொல்லிய 108 ஏக்கர் 1 றூட் 3 பேர்ச்சுக்குள்ளு மடங்கவில்லை யென்பதையுங் கவனிக்கவேண்டியது:—

இலங்கையளவைப் பிரதமபடம் 818.

| காணித் துண்டு | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. | காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A 2 | பானுகாகேன, வெல்கற்றுவ, 215,270, 221,214, 202,404 ம் உ. ப. ல் காணுங் காணிகள் .. | 10 | 3 | 18 | A 23 | புருனவெல .. .. | 0 | 0 | 5 |
| A 10 | புருனவெல .. .. | 11 | 3 | 10 | A 24 | ஷை .. .. | 0 | 0 | 5 |
| A 16 | ஷை .. .. | 0 | 0 | 4 | A 25 | ஷை .. .. | 0 | 0 | 5 |
| A 17 | ஷை .. .. | 0 | 0 | 8 | A 26 | ஷை .. .. | 0 | 0 | 8 |
| A 18 | ஷை .. .. | 0 | 0 | 15 | A 27 | ஷை .. .. | 0 | 0 | 9 |
| A 19 | ஷை .. .. | 0 | 0 | 4 | A 28 | ஷை .. .. | 0 | 0 | 12 |
| A 20 | ஷை .. .. | 0 | 0 | 8 | A 29 | ஷை .. .. | 0 | 0 | 22 |
| A 21 | ஷை .. .. | 0 | 0 | 8 | A 30 | ஷை .. .. | 0 | 0 | 13 |
| A 22 | ஷை .. .. | 0 | 0 | 9 | A 31 | ஷை .. .. | 0 | 0 | 11 |
| | | | | | | | 23 | 2 | 14 |

* இங்கிலீசின் மூன்றும் பாகம் 570 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்குக.

[அனுராதபுரம் வி. உ. 11—1922.]

---

[அறிவித்தல் இல. 8,091, கண்டி.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே அல்லது ஒன்றிலே அல்லது பலதிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1922 ம் ௵ மெய்மீ 26 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கண்டிக் கச்சேரியில் மத்திய மாகாண கண்டி டிஸ்திறிக்ற் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது அவைகளில் ஒன்றுக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட காணிகள் அல்லது அவைகளில் ஏதாவது மேற்சொன்ன உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற்சொல்லிய சட்டங்களினுல் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப் பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அவைகளில் ஏதாவது முடிக்குரியதென அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ரீ. ஜீ. வில்லற்,
மத்தியமாகாண உதவி அரசாட்சி ஏசென்று.

கவனிப்பு.—மேற்சொல்லிய காணி அல்லது அவைகளில் ஏதொன்றுக்குளிருக்கும் வளிப்பாதைக்குரிய உரித்து காணிகளுக்குரிய சொந்தைக்குச் சமானம்.

### சொல்லப்பட்ட காணியின் விவரம்.

இணைப்பிரதியில் *விவரிக்கப்பட்டபடி மத்திய மாகாண கண்டி டிஸ்திறிக்கில் உடம்பறை பகுதியின் கம்பாக கிழக்கு கோறளையில் கலவல கிராமத்திலுள்ள பின்வரும் காணித்துண்டுகள் :—

பிரதமபடத்து இலக்கம் 7,053.

| காணித்துண்டு. | | காணியின் பெயர். | விசாலம், ஏ. ரூ. ப. |
|---|---|---|---|
| 1 | .. | நாக்கடுனுகெட்டியாகேன .. .. .. .. | 1 1 16 |
| 2 | .. | நாக்கடுனுகெட்டியாகேன (கபபெரவலியகலகாவக்கந்துரைக்காக விட்டுவைக்கப்பட்டிருக்கிறது) .. .. .. .. | 0 3 0 |
| | | | 2 0 16 |

அவைகளின் எல்லைகளாவன: வடக்கே-மெதகெதற களுபண்டாவால் உரித்துப்பேசப்பட்ட குணகாலகாவகேன; கிழக்கே-கப்பெரவலிய கிலகாவக் கந்துரை; தெற்கே-மெதகெதற களுபண்டாவால் உரித்துப்பேசப்பட்ட கெற்றவலகேன; மேற்கே-கலவலஅனுத்கெதற சில்பாவால் உரித்துப்பேசப்பட்ட வெதகொட்டுவேகேனேயும், மெதகெதற கப்பிலே பண்டாவால் உரித்துப்பேசப்பட்ட மெதகெதறகேனேயும்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 571 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.